**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், ஆத்தூர்**
**முன்னிலை திரு.C. உதயசுந்தரம்.,பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்–2, ஆத்தூர்.**

**2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**சி.எம்.பி நெ. 1114/2024**
**In**
**M.C No. 06/2017**

**TNSA140000882017 (CNR No)**

| | |
|---|---|
| 1) மைனர்.அஜித்சுகநிதி,<br>த/பெ. நவீன்ராஜ்குமார்,<br>2) பிரபா, க/பெ.நவீன்ராஜ்குமார்,<br>**மனுதாரர்களின் முகவரி**<br>K.K தோட்டம்,<br>பொன்னொளி நகர்,<br>வேப்பநத்தம் அஞ்சல் மற்றும் கிராமம்,<br>ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். | ––– மனுதாரர்கள் |

/இடையே/

| | |
|---|---|
| நவீன்ராஜ்குமார்,<br>த/பெ.கிருஷ்ணன்,<br>K.K தோட்டம், பொன்னொளி நகர்,<br>வேப்பநத்தம் அஞ்சல் மற்றும் கிராமம்,<br>ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். | ––– எதிர்மனுதாரர் |

இம்மனுவானது கடந்த 08.08.2024ம் தேதி அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதார் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.M.மோகன்குமார் ஆகியோர் ஆஜராகியும், மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் அவருக்கு அறிவிப்பு வழங்கி அவர் ஆஜராகாத காரணத்தினால், இருதரப்பு வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கிற்கு இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்

## உத்தரவு

**1) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

2ம் மனுதாரர் பிரபா அவருக்காகவும், அவரது மைனர் குழந்தைக்காகவும், எதிர்மனுதாரர் நவீன்ராஜ்குமார் அவர்களிடமிருந்து ஜீவனாம்சம் கோரி M.C No.06/2017 என்று தாக்கல் செய்திருந்த வழக்கில் 1ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/–மும், 2ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/–மும், மொத்தம் ரூ.7,000/– ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டுமென்று கடந்த 03.06.2024ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், ஆனால், மேற்படி உத்தரவின்படி எதிர்மனுதாரர் கடந்த 07.04.2017ம் தேதி முதல் 03.06.2024ம் வரையிலான 85 மாத காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/–வீதம் மொத்தம் ரூ.5,95,000/–தில் எந்த தொகையையும் மனுதாரர்களுக்கு செலுத்தவில்லை என்றும், அதனால் மேற்படி தொகையை செலுத்தாத எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்ச பாக்கியை வசூல் செய்தும், எதிர்மனுதாரர் செலுத்த தவறும் பட்சத்தில் எதிர்மனுதாரரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டியும், உத்தரவிடுமாறு கோரி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரருக்கு முறையாக அறிவிப்பு கொடுத்து நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அதனால் எதிர்மனுதாரருக்கு எதிராக பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு, இன்று பிடிக்கட்டளை நிறைவேற்றப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/–மும், 2ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/–மும், மொத்தம் ரூ.7,000/– ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டுமென்று கடந்த 03.06.2024ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், ஆனால், மேற்படி உத்தரவின்படி எதிர்மனுதாரர் கடந்த 07.04.2017ம் தேதி முதல் 03.06.2024ம் வரையிலான 85 மாத

காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/—வீதம் மொத்தம் ரூ.5,95,000/— ஐ ஜீவனாம்சம் செலுத்த தவறியதால் அவருக்கு சிறைதண்டனை விதிக்க இயலுமா என்பதேயாகும்.

4) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ளதுபோல் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/—மும், 2ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/—மும், மொத்தம் ரூ.7,000/— ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டுமென்று கடந்த 03.06.2024ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், ஆனால், மேற்படி உத்தரவின்படி எதிர்மனுதாரர் கடந்த 07.04.2017ம் தேதி முதல் 03.06.2024ம் வரையிலான 85 மாத காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/—வீதம் மொத்தம் ரூ.5,95,000/—தினை ஜீவனாம்சமாக மனுதாரர்களுக்கு கொடுக்க M.C No.6/2017 வழக்கின் உத்தரவின் படி கடமைபட்டவராவார். மேற்படி நிலுவை தொகையில் ஏதேனும் பகுதியையோ அல்லது முழுமையான தொகையையோ எதிர்மனுதாரர் இதுநாள்வரை மனுதாரர்களுக்கு செலுத்தவில்லை என்பதும் தெரியவருகிறது.

5) இந்நிலையில் BNSS சட்டப்பிரிவு 144—ன் கீழ் ஜீவனாம்ச உத்தரவின் படி ஜீவனாம்சம் செலுத்த தவறும் ஒருவருக்கு ஒவ்வொரு தவறுதலுக்கும் ( For each default ) ஒரு மாதம் காலம் வரை அல்லது அதற்கு முன்னரே தொகை செலுத்தபடுமானால் அதுவரை சிறைதண்டனை விதிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் M. Rajkumar @ Muthaiya Vs The commissioner (HCP(MD)SR.No.31625 of 2018) என்ற வழக்கில் ஜீவனாம்ச தொகை செலுத்தாத ஒவ்வொரு மாதத்திற்கும் 15 நாட்கள் வீதம் தண்டனை வழங்கலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

6) மேற்படி உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின் படியும், குவிமுச பிரிவு 125 (3)ன் படியும் 1ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/—மும், 2ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/—மும், மொத்தம் ரூ.7,000/— ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டுமென்று கடந்த 03.06.2024ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

என்றும், ஆனால், மேற்படி உத்தரவின்படி எதிர்மனுதாரர் கடந்த 07.04.2017ம் தேதி முதல் 03.06.2024ம் வரையிலான 85 மாத காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/−வீதம் மொத்தம் ரூ.5,95,000/−ஐ உடனடியாக மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமென்றும் அல்லது 85 மாத கால ஜீவனாம்ச நிலுவை தொகை செலுத்தாத காரணத்திற்காக ஒரு மாதத்திற்கு 15 நாள் சிறை தண்டனை வீதம், 42 மாதம் மற்றும் 15 நாட்கள் எதிர்மனுதாரருக்கு மெய்க்காவல் சிறை தண்டனையும் வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

7) மனுதாரர்களுக்கு நிலுவை தொகையை சிறை காலத்தின் முன்னரே எதிர்மனுதாரர் செலுத்திவிட்டால் எதிர்மனுதாரரை மெய்க்காவல் சிறைதண்டனையிலிருந்து விடுவிக்கலாம் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

மேற்படி உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினி மூலம் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.09.09 17:28:24 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்

Note: Order uploaded CSI date in 09.09.2025